# THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

Covai | Chennai | Tirupur | Ooty | Coonoor | Kothagiri | Pollachi | Palani

Vol No. : 10 Issue No. : 25 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Sep 17-23, 2023, 12 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-



G.KUPPUSWAMY NAIDU MEMORIAL HOSPITAL
Coimbatore - 641 037



## FREE SCREENING CAMP FOR CHILDREN WITH HEART DEFECTS

Age Criteria: New born till 18 yrs

Date : Sunday, September 24,2023
Time : 10 A.M. TO 3 P.M.
Venue : GKNM Hospital
Papanaickenpalayam, Coimbatore

**Children with following symptoms:**

- Breathing difficulty while playing or at rest
- Poor weight gain
- Excessive forehead sweating
- Bluish discoloration of lips and body
- Frequent lung infections
- Dizziness
- Children with genetic defects
- Congenital heart disorder

ECHO Free ECHO screening (If prescribed by doctors)

Consultation by Experienced Paediatric Cardiologists

For Screening Camp Registration:
82200 99061

GKNM HOSPITAL RUN for LITTLE HEARTS 2023

MAKING EVERY CHILD'S HEART... Happy



Powered by: LMW

In Aid of Children with Heart Defects and Childhood Cancers

Recognized by Coimbatore District Athletic Association

SUNDAY
24th
SEP '23
MANI HR. SEC. SCHOOL
Pappanaickenpalayam, Coimbatore
5.30 A.M

CATEGORIES: 1&3 Kms 5 Kms 10 Kms

Title Sponsor: GKNM HOSPITAL
Powered by: LMW
Platinum Sponsor: Lakshmi Mills
Gold Sponsor: Lakshmi
Supported by: Lions International District 324 D 2023-2024
Radio Partner: Hello FM
Digital Partner: appac media
Registration Partner: Sporfy

For More details:
Ph: 97900 72303

# மயூரா சிட்டி

**மரிச்சிலம்பு, தொப்பம்பட்டி, பழனி, திண்டுக்கல் மாவட்டம் - 624613.**




## 40+ AMENITIES

- தார் சாலை வசதி
- தண்ணீர் வசதி
- தெரு விளக்கு வசதி
- மின்சார வசதி
- பாதுகாப்புடன் கூடிய காம்பவுண்ட் வசதி
- முகப்பு நுழைவு வாயில்
- பாதுகாவலர் வசதி
- நிழல் தரும் சாலையோர மரங்கள்
- குடிநீர் தொட்டி [30,000 லிட்டர் கொள்ளளவு]
- 24 மணிநேர பாதுகாப்பு & கண்காணிப்பு
- பழ தோட்டங்கள்
- தாவரவியல் பூங்கா
- JACKING பாதை
- வெளிபுற விருந்து புல்வெளி
- பெரியவர்களுக்கான ஊஞ்சல்
- மலர் தோட்டம்
- செல்லப்பிராணி ZONE
- வலை கிரிக்கெட்
- RUNNING TRACK
- பூ பந்து மைதானம்
- கைப்பந்து மைதானம்
- நீளம் தாண்டுதல் பிட்
- ஒன்று கூடும் பகுதி
- சிறுவர்களுக்கான மணல் பிட்
- குழந்தைகள் விளையாட்டு பகுதி
- சிறுவர்களுக்கான ஊஞ்சல்
- சிறுவர்களுக்கான ஸ்லைடு
- சிறுவர்களுக்கான சைக்கிள் ஓட்டும் பாதை
- எடை சீசா
- வரவேற்பு மற்றும் இருக்கை லவுன்ச்
- கேரம்
- சதுரங்கம்
- டேபிள் டென்னிஸ்
- சிறுவர்களுக்கான HAMMOCK
- ஒன்று கூடி குளிர்காயும் வசதி
- அக்கு ப்ரஸர் நடை பாதை
- பொழுது போக்கிற்கான இடம்
- PARKING வசதி
- வரவேற்பு தாமரை குளம்

**For Booking Contact: 90920 20399, 90920 20599, 90920 20799, 90920 20899 90420 02000, 99655 22116**

SREE Annapoorna
SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# THE COVAI MAIL
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.
Covai | Chennai | Tirupur | Ooty | Coonoor | Kothagiri | Pollachi | Palani
Vol No. : 10 Issue No. : 25 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Sep 17-23, 2023, 12 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

ஸ்ரீ அன்னபூர்ணா
ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்டரிங்

## கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில்

# புற்றுநோயாளிகளுக்கு "பாலியேட்டிவ் கேர்" வார்டு!

✍ தி கோவை மெயில்

கோயமுத்தூர் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் உலகத் தரமான அதிநவீன புற்றுநோய் மருத்துவ சிகிச்சை மையம் செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டு துவங்கப்பட்ட இந்த மையத்தில் சிகிச்சை பெற்று நோயுடன் போராடி வென்றவர்கள் பலர் ஆவார்.

புற்றுநோயில் இருந்து குணமடைந்தவர்கள், அவர்களுக்கு உறுதுணையாக நின்றவர்கள், நோயுடன் போராடிக் கொண்டிருப்பவர்களைப் பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் 'ரோஸ் தினம்' கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை 11வது ரோஸ் தினத்தை கொண்டாடியது. ஒவ்வொரு ஆண்டும் புதிய முன்னேற்றத்துடனும், புதிய நம்பிக்கையுடனும் தொடங்கும் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை இந்த ஆண்டு, புற்றுநோய் முற்றிய நிலையில் உள்ளவர்களுக்கு சிறப்பு கவனத்துடன் கூடிய சிகிச்சை அளிப்பதற்காக 'பாலியேட்டிவ் கேர்' என்ற பிரத்யேக வார்டு ஒன்றைத் துவங்கியிருப்பது கூடுதல் சிறப்பு.



புற்றுநோய் சிகிச்சை மையத்தை துவக்கி வைக்கிறார்கள் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்ல பழனிசாமி, சிறப்பு விருந்தினர் பர்வீன் சுல்தானா, மருத்துவமனை துணைத் தலைவர் தவமணி தேவி பழனிசாமி, செயல் இயக்குனர் அருண் பழனிசாமி ஆகியோர்.

### ரோஸ் தின சிறப்பு நிகழ்ச்சி:



புற்றுநோயாளிகள் நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டும் என்ற நோக்கில், கே.எம்.சி.ஹெச். புற்றுநோய் மையம் சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. கே.எம்.சி.ஹெச். கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் புற்றுநோயிலிருந்து மீண்டவர்கள், அவர்தம் குடும்பத்தினர், மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

புற்றுநோயியல் துறை டாக்டர் சுப்பிரமணியம் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக பிரபல தன்னம்பிக்கை பேச்சாளர் முனைவர் பர்வீன் சுல்தானா பங்கேற்றார். கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று புற்றுநோயில் இருந்து மீண்டு வந்தவர்கள், எவ்வாறு மனவுறுதியுடன் தங்கள் வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதை விளக்கும் குறும்படம் திரையிடப்பட்டது.

இங்கு சிகிச்சை பெற்ற நோயாளிகளில் பெரும்பாலானோர் தங்களது வழக்கமான வாழ்க்கை முறைக்குத் திரும்பியுள்ளனர். இது தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் மிகுந்த ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிப்பதாய் அமைந்தது.

### கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் 'தி கார்டியன்' திட்டம்:

புற்றுநோய் முற்றிய நிலையில் உள்ளவர்களுக்கு சிறப்பு கவனத்துடன்கூடிய சிகிச்சை அளிப்பதற்காக 'பாலியேட்டிவ் கேர்' என்ற பிரத்யேக வார்டு துவக்கப்பட்டுள்ளது. ரோட்டரி கிளப் கோயமுத்தூர் மெரிடியன் மற்றும் ஆட்டிடியூட் சாரிடபிள் டிரஸ்ட் ஆகிய இரண்டும் அமைப்புகளும் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையுடன் இணைந்து 'தி கார்டியன்' என்ற திட்டத்தின்கீழ் புற்றுநோய் பாதித்த ஏழை எளிய மக்களுக்கு பாலியேட்டிவ் கேர் சேவையைக் கட்டணமின்றி அளித்திட முன்வந்துள்ளன.

கே.எம்.சி.ஹெச். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அமைந்திருக்கும், இந்தப் பிரிவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி மற்றும் உதவித் தலைவர் டாக்டர் தவமணிதேவி பழனிசாமி ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்த வார்டில் நோயாளிகளுக்கு சலுகைக் கட்டணங்களில் தேவையான சிகிச்சைகள் அளிக்கப்படவுள்ளன. அதோடு, பாலியேட்டிவ் கேர் என்ற இப்புதிய சேவைப்பிரிவின் மூலம் கே.எம்.சி.ஹெச். அளிக்கும் புற்றுநோய் மருத்துவம் மேலும் முழுமைபெற்ற சேவை மையமாகத் திகழும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

அண்மையில், பிரபல நாளிதழ் நடத்திய சர்வே ஒன்றில் புற்றுநோய் சிகிச்சை வழங்கும் மருத்துவமனைகளில், குறிப்பாக தென்னிந்தியாவில், மிகச் சிறந்த மூன்றாவது மருத்துவ மையமாக கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையை அங்கீகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.




நிகழ்வில் ரோட்டரி கிளப் கோயமுத்தூர் மெரிடியன் மற்றும் ஆட்டிடியூட் சாரிடபிள் டிரஸ்ட் ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்களுடன் எடுத்துக்கொண்ட குழு புகைப்படம்.

### 30 படுக்கைகள் கொண்ட 'பாலியேட்டிவ் கேர்' வார்டு:

விழாவிற்குத் தலைமை வகித்த கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் நல்லா ஜி பழனிசாமி பேசியதாவது,

'கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை துவங்கப்பட்ட தினத்திலிருந்தே பாலியேட்டிவ் கேர் துவங்கியது என்றால் அது மிகையாகாது. தற்போது, இந்த சேவைக்காக பிரத்யேகமாக 30 படுக்கைகள் கொண்ட வார்டு கே.எம்.சி.ஹெச். மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ளது. புற்றுநோயின் இறுதிக்கட்ட நிலையில்தான் பாலியேட்டிவ் கேர் அவசியமா என்றால் அப்படி இல்லை. நோயின் அறிகுறி கண்டறிந்த அந்த நாளிலிருந்தே பாலியேட்டிவ் சேவை தொடங்கும்.

இந்நோயிலிருந்து விடுபட அதற்காக எடுத்துக்கொள்ளும் சிகிச்சை முறைகள் ஒருவரை விரைவில் சோர்வடைய செய்துவிடும். அதனைத் தடுக்க மருத்துவர்களும், செவிலியர்களும் எடுக்கும் முயற்சிகள் அதிகம். இந்த சேவை புற்றுநோயாளிகளுக்கு மட்டும்தானா? மூச்சுக் குழாய், நரம்பியல் சார்ந்த பிரச்னைகள் உள்ளவர்கள் என அனைவருக்கும் இந்த சேவை அவசியமான ஒன்றுதான்.

மருந்து, மாத்திரை, சிகிச்சையில் மட்டும் ஒருவரின் நோயை குணப்படுத்திவிட முடியாது. அதைத் தவிர்த்து, உளவியல் ரீதியாக அணுகும்போது நோயிலிருந்து விரைவில் விடுபட இயலும். இங்கு, குழந்தைகள் புற்றுநோய் வார்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. கொரோனா தாக்கம் உச்சத்தில் இருந்த சமயம் அது! இங்கு, நோய் கண்டறியப்பட்ட நாள் முதல், அனைத்து சிகிச்சைகளையும் இலவசமாக செய்துகொண்ட பலர் குணமடைந்துள்ளனர். கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில், எண்ணற்ற பேர் குணமடைந்து செல்கின்றனர். அவர்கள் மனதில் இது நம் மருத்துவமனை என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருக்கும்' என்றார்.



### நோயை வெல்வதற்கான இடம்:

கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் செயல் இயக்குனர் அருண் பழனிசாமி பேசுகையில், 'முடிவே இல்லாத போராட்டம்தான் இந்த வாழ்க்கை என்றில்லாமல் முடியும் வரை போராடலாம்' என்ற ஊக்கம் தருவதும், புற்றுநோயை வெல்வதற்கு ஏற்ற இடமும் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை. இங்கு, அதிநவீன தொழில்நுட்பங்கள் கொண்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், மக்கள் மத்தியில் வரும் காலங்களில் புற்றுநோய் தொடர்பான அச்சத்தை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை போக்கும்' என்றார்.



**"புற்றுநோயின் நோயின் அறிகுறி கண்டறிந்த அந்நாளில் இருந்தே பாலியேட்டிவ் சேவை தொடங்கும். இந்நோயிலிருந்து விடுபட அதற்காக எடுத்துக்கொள்ளும் சிகிச்சை முறைகள் ஒருவரை விரைவில் சோர்வடைய செய்துவிடும்.**

### நாணயத்தின் இரு பக்கங்களிலும் ஒன்றே:



சிறப்பு விருந்தினர் பர்வீன் சுல்தானா பேசுகையில், "காவல் துறையில் இருக்கக் கூடியவர்கள், இராணுவ வீரர்கள், விளையாட்டு வீரர்கள் மட்டும் வீரர்கள் கிடையாது, பார்த்து பயந்து நடுங்கி அதற்கு அடிமையாய் செத்துப் போகின்றவர்கள் மத்தியில், நோயை எதிர்த்துப் போராடி நின்று ஜெயிக்கின்ற நீங்கள் அனைவரும் வீரர்களே.

போருக்கு செல்லும்முன் தன் படை வீரர்கள் முன்னிலையில் தலை விழுந்தால் வெற்றி; பூ விழுந்தால் தோல்வி என்று 'டாஸ்' செய்வது நெப்போலியனின் வழக்கம். அவன் போருக்குச் சென்ற இடமெல்லாம் வெற்றிவாகை சூட்டினான். அதற்கான இரகசிய காரணத்தை தன வாழ்வின் பின்னாளில் கூறுகையில், டாஸ் செய்த நாணயத்தின் இரு பக்கங்களிலும் தலை சின்னத்தை ஒட்டியதுதான் என்றான். ஆகையால், மனதைப்போல் பலமான ஓர் ஆயுதம் இங்கு எதுவுமில்லை. வாழ்க்கை நாம் எதிர்பார்ப்பதைவிட, அது எப்படி இருந்தாலும் துணிவுடன் எதிர்கொள்கிறவர்களுக்குத்தான் வெற்றி. எனவே, புற்றுநோய் தாக்கத்திலிருந்து மன வலிமையுடன் மீண்டு வருவீர்கள் என்று நம்புங்கள்' என ஊக்கமளித்தார்.

PSG Polytechnic College Celebrates Foundation Day

# You are poised to write your own history

**-Viswanathan,** Deputy Chairman - Chennai Port Authority




*Distinguished Guests (From left) Lalitha Rao Sahib, Managing Director, Sri Nuthatch Nutricare Technologies, Bengaluru, Lt Col Senthil Kumar, Additional Director – Training, Karnataka & Goa NCC Directorate, Banglore, Sivalingam, Additional Divisional Railway Manager, Salem Division, G.R.Karthikeyan, Chairman, PSG & Sons' Charities, Chief Guest Thenmozhi Selvi, Project Director - Oceansat 3/3A, ISRO, Bengaluru, Viswanathan IAS, Deputy Chairman - Chennai Port Authority, Chennai, L. Gopalakrishnan, Managing Trustee, PSG & Sons' Charities, and Giriraj, Principal, PSG Polytechnic were present in the Foundation day.*

✍ Madhumitha.R, THE COVAI MAIL

PSG Polytechnic College celebrated its Foundation Day on September 15th, 2023, with notable guests, including Thenmozhi Selvi, Project Director - Oceansat 3/3A, U R Rao Satellite Center (URSC), Indian Space Research Organisation (ISRO), Bengaluru.

L. Gopalakrishnan, Managing Trustee of PSG & Sons' Charities presided over the function. Giriraj, Principal of the College delivered the welcome address. This marked 84 years since the college's establishment as Tamil Nadu's first private Polytechnic institution.

The event recognized four outstanding alumni for their contributions to society and excellence in Science, Technology, and Engineering.

These alumni, including Sivalingam, Additional Divisional Railway Manager, Southern Railways - Salem Division, Lt Col Senthil Kumar, Additional Director – Training, Karnataka & Goa NCC Directorate, Banglore, Lalitha Rao Sahib, Managing Director, Sri Nuthatch Nutricare Technologies, Bengaluru and Viswanathan IAS, Deputy Chairman - Chennai Port Authority, Ministry of Ports - Shipping and Waterways, Government of India, Chennai were honoured by the Chief Guest and the Managing Trustee.

Prof. Brindha, Head of the Department of Computer Networking was also honoured for her achievement of receiving the National Teacher's Award on Teacher's Day from the President Droupadi Murmu. Arasu, HOD, Department of Foundry Technology, delivered the vote of thanks.

With around 1800 attendees, including alumni, guests, students, and faculty, the Foundation Day celebration served as a prestigious and memorable occasion.

## Excellence in **Education**

**- Giriraj,** Principal, PSG Polytechnic

The Principal highlighted PSG Polytechnic College's 84-year legacy, offering 14 regular and 3 sandwich diploma programs, with 9 accredited programs. He mentioned the introduction of two new programs: Artificial Intelligence and Machine Learning, and Mechanical Engineering.

"The institution has 1,500 students, focusing on practical learning with modern laboratories. An impressive 90% of final-year students successfully completed their diplomas, with an average placement salary of 3,00,000 per annum.

Faculty members are active in research, publishing 34 papers, and completing 5 consultancy projects, including 3 Indian patents. PSG Polytechnic fosters experiential learning through internships, industry partnerships, and offers short-term courses, excelling in extracurricular activities, with continuous facility upgrades," he added.

## Shaping the **Future**

**- L. Gopalakrishnan,**
Managing Trustee, PSG & Sons' Charities



He emphasized aligning alumni recognition with the respective institution's founding day, allowing them to "honour the past, celebrate the present, and look forward to a promising future."

He recounted PSG's history, from introducing diploma programs in the 1930s to responding to wartime needs for trained technicians during World War II. This experience led to advancements in the technical sector and the recognition of PSG Rangasamy Naidu as 'Dewan Bahadur' in 1943. The institution expanded into engineering and gained autonomous status in 1976.

He highlighted the Daniel Open House Project Exhibition as a testament to the college teaching quality and its impact on local industries. He also underlined the privilege of honouring distinguished alumni and PSG Polytechnic College's continuous commitment to knowledge pursuit and shaping the future of education and dreams.

## Perseverance and **Science**



**- Thenmozhi Selvi,**
Project Director - Oceansat 3/3A, ISRO, Bengaluru

Chief Guest commended PSG Polytechnic for its advanced courses, highlighting the significance of technology in the modern world, including its applications in space exploration.

She acknowledged the contributions of PSG alumni, like Annadurai, who played a vital role in ISRO's success. She emphasized the importance of perseverance and learning from failures, such as Chandrayaan-2's experience.

She encouraged students to aim higher, surpass their capabilities, and give back to society. She briefly explained the workings of satellites and highlighted ISRO's successful missions, showcasing the significance of science in the organization's achievements.

## From Vision to **Reality**

**– Prof. Brindha,**
Head of the Department of Computer Networking



She shared her journey at PSG Polytechnic and the launch of Diploma in Computer Networking. She credited several principals for their support and opportunities, who also allowed her to start the Diploma in Artificial Intelligence and Machine Learning.

She praised the management's generous support in providing necessary hardware, software, and specialized laboratories, making PSG Polytechnic a role model for other institutions.

She expressed gratitude to the dedicated students and alumni who played a significant role in the department's success. She concluded by expressing confidence that PSG would continue to produce outstanding individuals.



## A Foundation of **Sincerity and Hard Work**

**- Sivalingam,** Additional Divisional Railway Manager, Southern Railways - Salem Division

Sivalingam, fondly recalled his encounter with then-Chief Minister MGR in 1983 when he was a young NCC Cadet at the same location. He expressed his desire to study at PSG, even at the age of 11, after being inspired by the college students who visited his hometown for an NSS camp. Despite starting at the bottom rung (4th grade) when he joined RRB, he has now risen to the 14th grade out of 17 grades in the Central Government, which he attributes to the values of sincerity and hard work instilled in him by PSG.

He praised the college for providing advanced training and well-equipped labs, highlighting the institution's emphasis on continuous assessments. Sivalingam expressed his gratitude to his teachers for teaching him the value of hard work, which he believed has led him to his current successful position.

## Message on **Service & Ambition**

**- Viswanathan IAS,** Deputy Chairman - Chennai Port Authority, Ministry of Ports - Shipping & Waterways, Govt. of India, Chennai.



Viswanathan credited the institution for consistent job placements and for imparting values, ethics, and a strong sense of culture. He emphasized the importance of these teachings in shaping his character and fueling his ambition. Also mentioned that there is no limit to serving the people and that anyone can become a catalyst for our country's progress by dedicating their work to the service of the people.

He encouraged everyone present, stating, "You all have the potential to become pillars of our nation. The opportunity to make your teachers proud is within your grasp. You are poised to write your own history, and remember, hard work is the key mantra for success."



## Journey of **Transformation**


**- Lt Col Senthil Kumar,**
Additional Director – Training, Karnataka & Goa NCC Directorate, Banglore

Lt Col Senthil Kumar shared his journey at PSG Polytechnic and credited the institution for transforming his life, overcoming academic challenges, and receiving admission through PSG Trust. Though his father aspired for him to become an engineer, Kumar pursued a military career, attributing his physical fitness and work ethic to PSG Polytechnic by saying, "The seed was my father's but the manure and water for me as roots to become great is the PSG Polytechnic."

He also recalled teachers and faculty who left an impact, notably in mathematics. Kumar praised the college's global reputation and charitable work, expressing gratitude for receiving a distinguished award for his service to the nation.

## Success and **Appreciation**

**- Lalitha Rao Sahib,** Managing Director, Sri Nuthatch Nutricare Technologies, Bengaluru



Lalitha Rao, receiving an award from her alma mater on its foundation day, expressed gratitude to her parents for encouraging her to join the institution. She lauded the institution for being her launchpad into the real world and emphasized its invaluable lessons. Lalitha shared an interview experience where she was selected despite not being questioned on her subjects, as her PSG Polytechnic background was highly regarded.

She also reflected on her journey with PSG, highlighting the importance of language. She urged alumni to mentor and inspire future generations, keeping the founders' spirit alive. Lalitha celebrated the institution's impact and called for continued contributions to make the college proud.

# வயிறு பிரச்னையா? வாங்க கே.ஜி.க்கு

**- டாக்டர். பத்மஸ்ரீ கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி.மருத்துவமனை**



**ஜீரணம், வயிறு தொடர்பான எந்தப் பிரச்னைகள் என்றாலும், உடனே கே.ஜி. மருத்துவமனையை அணுகுங்கள். இதற்கான கைதேர்ந்த நிபுணர்கள் கே.ஜி மருத்துவமனையில் உள்ளனர்.**

வயிறு பிரச்னைகள் மற்றும் அதன்மூலம் வரும் நோய்கள், அதற்கான தீர்வுகள் குறித்து கே.ஜி. மருத்துவமனைத் தலைவர் டாக்டர் பக்தவத்சலம் கூறியதாவது,

'நாம் அனைவருமே உணவுக்காகவே உழைக்கிறோம். அத்தகைய உணவு வாயினுள் செல்லும்போது அதன் சுவை நமக்குத் தெரிய வேண்டும். அதேநேரம், உண்ணும் உணவு மூச்சுக்குழாய்க்குள் சென்றுவிடக் கூடாது. ஆகவே உணவு உண்ணும்போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

நமது உடலின் மிகவும் முக்கியமான ஜீரண மண்டலத்தை முறையாக கவனித்துக்கொள்ள வேண்டும். நம்மை நம்பி நமது குடும்பம் உள்ளது. மதுப்பழக்கம் அதிகமாக இருந்தால் நமக்கு குடும்பத்தினர் மீது அக்கறை இல்லை என்று அர்த்தம்.

அனைத்து வகை நோய்க்களுக்கான மருத்துவ சிகிச்சைக்கும் தற்போது துறை சார்ந்த சிறப்பு நிபுணர்கள் உள்ளனர். முன்பெல்லாம் எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவர் ஒருவரே, நோயாளியின் அனைத்து உடல் பிரச்னைகளுக்கும் சிகிச்சை அளிப்பார்.

கே.ஜி. மருத்துவமனையில் ஜீரண நலத் துறையில் மருத்துவத் துறை நிபுணர் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் உள்ளனர். இங்குள்ள டாக்டர் அருள்செல்வன், வயிறு தொடர்பான அனைத்துப் பிரச்னைகளையும் வெகு சிறப்பாக கையாள்கிறார். அதேபோல், டாக்டர் கல்யாண சுந்தரபாரதி அறுவைசிகிச்சை மேற்கொள்வதில் சிறந்து விளங்குகிறார். இருவரும் இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள். மருத்துவமனைக்குச் செல்லாமல் இருப்பதுதான் நல்லது. ஆனால் அதற்கு ஒரு நோய் வரும் முன்னதாகவே நாம் அதனைத் தடுக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தயவு செய்து மதுப்பழக்கத்தைக் கைவிடுங்கள். இதனால் உங்கள் உடலில் மட்டுமல்ல, குடும்பத்திலும் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன.

நமது உடல், ஒரு வாகனம்போல். அதற்குத் தேவையான எரிபொருள், உணவு மட்டுமே. மதுபானம், நமது கல்லீரலை பாதிக்கும். புகைப்பழக்கம், நமக்கு புற்றுநோயை ஏற்படுத்தும், மாரடைப்பை வரவழைக்கும். அதேபோல் வாகனம் விபத்தில் சிக்கி எப்படி சின்னாபின்னமாகிறதோ, உடலும் சீர்கெட்டுப் போகிறது.

வயிறு தொடர்பான பிரச்னைகள் வருவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அதிகமான அமிலம் இருந்தால் அல்சர் ஏற்படும். பித்தப்பை சரி இல்லை என்றாலும் அஜீரணக் கோளாறு வரும். கல்லீரலில் அமீபா சென்றாலும் இந்த பிரச்னை ஏற்படும். அபெண்டிக்ஸ் மற்றும் குடலில் ஏற்படும் டி.பி. போன்ற அனைத்து நோய்களையும் கண்டறியும் வசதிகள் இங்குள்ளன. இந்நோய்களுக்கான அனைத்துப் பரிசோதனைகளையும் செய்வதற்கு ஒரு நாள் தேவைப்படும்.

எங்கள் ஜீரண நலத் துறையில், முதலில் வயிற்றுக்கு எக்ஸ்ரே, நெஞ்சுப் பகுதிக்கு எக்ஸ்ரே எடுப்போம். சிறு குடல் வரை செல்லும் எண்டோஸ்கோபி எடுப்போம். இரத்தப்போக்கு இருந்தால் அது எத்தகைய இரத்தப்போக்கு என்பதை ஆராய்ந்த பிறகே சிகிச்சை அளிக்கிறோம். பைல்ஸ் என்றால் அதற்கான பரிசோதனைகளும் செய்த பின்னர் சிகிச்சை அளிப்போம்.

மருத்துவ நிபுணரும், அறுவை சிகிச்சை நிபுணரும் இணைந்து சிகிச்சை அளிப்பார்கள். எனவே, ஜீரணம், வயிறு தொடர்பான எந்தப் பிரச்னைகள் என்றாலும், உடனே கே.ஜி. மருத்துவமனையை அணுகுங்கள். இதற்கான கைதேர்ந்த நிபுணர்கள் கே.ஜி மருத்துவமனையில் உள்ளனர்.

இந்தியாவில் தற்போது 140 கோடி மக்கள்தொகை உள்ளது. மருத்துவத் துறையில் இன்னும், இன்றும் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. கற்றது கை மண் அளவு, கல்லாதது உலக அளவு என்பார்கள். ஆனால். இந்த நவீன உலகில் கல்லாதது கூகுள் அளவு என்பேன் நான். நாம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் வீட்டில் சமைத்த உணவை சாப்பிட வேண்டும். தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் மருத்துவரை சந்திக்க வேண்டிய அவசியமே இல்லை' என்றார்.

---

**வைரஸ் கிருமிகள், நமது கல்லீரலில் பாதிப்பை ஏற்படுத்தி கேன்சரை ஏற்படுத்துகின்றன. அதேபோல், காரமான உணவுகள் அதிகம் எடுத்துக்கொள்வதாலும் உணவுக்குழாய் கேன்சர் ஏற்படும்.**



# ஜீரண மண்டலத்தை பத்திரமாக பாத்துக்கோங்க!



Dr. R.P. தர்மேந்திரா
ஜீரண நலத்துறை
அறுவை சிகிச்சை நிபுணர்



Dr. V. அருள் செல்வன்
ஜீரண நலத்துறை சிகிச்சை நிபுணர்

கே.ஜி. மருத்துவமனையின் ஜீரண நலத் துறை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கல்யாண சுந்தர பாரதி கூறியதாவது:

'அறுவை சிகிச்சையே செய்ய முடியாது என்ற நிலையில் இருந்த நோய்களுக்கும் தற்போது அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அந்த அளவுக்கு மருத்துவத் துறை சிறப்பான வளர்ச்சி அடைந்துள்ளது. ரோபோட்டிக்ஸ் டெக்னாலஜியை ஜீரண நலத்துறை அதிகமாக பயன்படுத்துகிறது.

ஜீரண மண்டத்தில் வரும் கேன்சருக்கான அறுவை சிகிச்சையை லேப்ரோஸ்கோபி மற்றும் ரோபோட்டிக்ஸ் மூலமாக மேற்கொள்கிறோம். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையையும் இங்கு மேற்கொள்கிறோம்.

அதிகமாக குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு இரத்த வாந்தி, மஞ்சள் காமாலை, உடல் சோர்வு உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படும். அவர்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்கிறோம்.

அல்சர் நோயால் வரும் பிரச்னைகள், பித்தப்பை பிரச்னைகளுக்கான சிகிச்சைகளையும் நாங்கள் செய்கிறோம். இந்தியாவில் 2022ல் நடத்தப்பட்ட ஆய்வின்படி, அதிகப்படியான கேன்சர் உடலில் எந்த பகுதியை பாதிக்கும் என்றால், அது ஜீரண மண்டலத்தில்தான்.

ஒன்பது இந்தியர்களில் ஒருவருக்கு அவரது வாழ்நாளில் கேன்சர் வருகிறது. அதில் 39 பேரில் ஒருவருக்கு ஜீரண மண்டலத்தில் கேன்சர் வருகிறது. அதில் உணவுக்குழாய் மற்றும் இரைப்பையில்தான் அதிகமாக கேன்சர் பாதிப்பு ஏற்படுகிறது. 100 பேரில் ஒருவருக்கு இங்குதான் கேன்சர் ஏற்படுகிறது. இந்தியாவில் 25 சதவீத கேன்சர் பாதிப்பு ஜீரண மண்டலத்தில்தான் ஏற்படுகிறது. இதற்கு உணவுப் பழக்கங்களில் ஏற்பட்ட மாற்றம்தான் காரணம்.

கேன்சரை கண்டுபிடிப்பதற்கான தொழில்நுட்பம் அதிகரித்துள்ளதால் அதிக அளவில் கேன்சர் பாதிப்புகள் கண்டறியப்பட்டு வருகிறது. மதுப்பழக்கம் மற்றும் புகைப்பழக்கத்தாலும் கேன்சர் ஏற்படுகிறது.

புகைப்பழக்கத்தால் மூளையில் தொடங்கி பெருங்குடல் மற்றும் மலக்குடலில்கூட கேன்சர் ஏற்படுகிறது. ஆனால் இவை அனைத்தும் நம்மால் தவிர்க்கக்கூடிய நோய்களில் ஒன்று.

வைரஸ் கிருமிகள், நமது கல்லீரலில் பாதிப்பை ஏற்படுத்தி கேன்சரை ஏற்படுத்துகின்றன. அதேபோல், காரமான உணவுகள் அதிகம் எடுத்துக்கொள்வதாலும் உணவுக்குழாய் கேன்சர் ஏற்படும். பெருங்குடல் கேன்சரை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்தால் அதனை முழுமையாக குணப்படுத்த முடியும்.

வயிறு வலி, வாந்தி, குமட்டல், பசியின்மை, உடல் எடை குறைவு, உடல் சோர்வு, இரத்தப்போக்கு உள்ளிட்டவை ஜீரண மண்டலத்தில் வரும் தொந்தரவுகளாக உள்ளன. ஜீரண மண்டலத்தில் பிரச்னைகள் ஏற்பட்டால் தொடர் வயிற்று வலி ஏற்படும். இதனை நாம் முறையாக கவனித்துக்கொள்ள வேண்டும். மாதம் ஒருமுறையாவது நாம் நமது உடல் எடையை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

காய்கறிகள் டயட் எடுத்துக்கொள்ள வேண்டும். மாமிச உணவுகளை அதிகமாக சாப்பிடுவதால் குடல் கேன்சர் ஏற்படுகிறது.

இந்நோயிலிருந்து தப்பிக்க ஒரு நாளைக்கு 45 நிமிடம் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.


கே.ஜி. மருத்துவமனையில் இந்நோயைக் கண்டறியும் அனைத்து விதமான நவீன உபகரணங்களும் உள்ளன' என்றார்.




## கே. ஜீ. நவீன லேபராஸ்கோபி & பொது அறுவை சிகிச்சை மையம்

நவீன சிகிச்சைகள்

- அப்பெண்டிக்ஸ்
- பித்தப்பை
- கர்ப்பப்பை
- தைராய்டு
- பைல்ஸ்
- பௌத்ரம்
- ஹெர்னியா
- விரை வீக்கம்
- மார்பு கட்டிகள்
- தோல் கட்டிகள்
- கல்லீரல் நோய்
- புற்று நோய்



நவீன அறுவை சிகிச்சை அரங்கு

KG கேஜி மருத்துவமனை, கோயமுத்தூர் ✆ : 0422 - 221 91 91, 222 22 22

# எதிர்மறை தீவிரவாதத்தை வெல்லட்டும் அன்பின் தீவிரம்!

✍ தி கோவை மெயில்

வெறுப்புணர்ச்சியின் உந்துதலில் தீவிரவாதிகளாக மாறியிருப்போரின் பக்கம் தராசுமுள் சாயாமல், அன்புணர்வுடன் இயங்குபவர்களின் பக்கம் சாய்வதற்கு சத்குருவின் ஆசிகள் இங்கே!

சத்குரு: உலகத்தையே அச்சுறுத்தி வரும் தீவிரவாதிகள் அவ்வப்போது வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைத்தான் நாம் எப்போதும் பார்க்கிறோம். அவர்களுக்கு இருக்கும் திறமை பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளத் தேவையான ஒவ்வொன்றையும் நிச்சயமாக தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள். ஏனெனில் அவர்களை இயக்கும் சக்தியாக வெறுப்புணர்ச்சி இருக்கிறது.

**வெறுப்புணர்ச்சியால் இயக்கப்படும் மக்கள் அவ்வளவு திறமையாக இருக்கும்போது, அன்பால் இயக்கப்படும் மக்கள் அதைவிட அதிக திறமையுடன் இருக்க வேண்டும்**

வெறுப்புணர்ச்சி ஒருவருக்குள் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டால் பிறகு அவர் இறப்பது பற்றி கவலைப்பட மாட்டார். ஏனெனில் வாழ்வதற்கான ஒரு அழுத்தமான வாய்ப்பை வெறுப்புணர்ச்சி அவர்களுக்குத் தந்திருக்கிறது. தான் ஈடுபட்டுள்ள ஒன்றிற்காக அவர் உயிரையும் விருப்பத்துடன் கொடுப்பார். பொதுவாக இத்தகைய தீவிரம்தான் ஏதோ ஒன்றை சாதிப்பதற்கு உதவும். ஆனால் அவர்களிடம் உள்ள தீவிரம் தற்போது எதிர்மறையாக இருக்கிறது.

இந்த உலகம் மிகப்பெரியது. எல்லாவித மக்களையும் தனக்குள் அடக்கியிருக்கிறது. உண்மை என்னவென்றால் எல்லாவித மக்களும் எப்போதும் இருந்தார்கள். இனியும் இருக்கவே செய்வார்கள். எனவே வெறுப்புணர்ச்சியால் இயக்கப்படும் மக்கள் அவ்வளவு திறமையாக இருக்கும்போது, அன்பால் இயக்கப்படும் மக்கள் அதைவிட அதிக திறமையுடன் இருக்க வேண்டும். தராசுமுள், வெறுப்பின் காரணமாக செயல்பட்டுக் கொண்டிருப்பவர்களின் பக்கம் சாயும்போதெல்லாம் உலக மக்களின் வாழ்க்கை மிகவும் சிரமத்திற்குள்ளாகிறது.

எனவே அன்புணர்வுடன் இயங்கும் மக்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு பல செயல்கள் நடக்க வேண்டியிருக்கிறது.

அதற்கான விழிப்புணர்வு உடனே வரவேண்டும். ஈஷாவில் நாம் செய்யும் முயற்சிகள் அனைத்துமே, தராசுமுள் எப்போதும் அன்பால் இயங்குபவர்கள் பக்கம் சாயும்படி பார்த்துக் கொள்வதாகவே இருக்கிறது. ஈஷாவின் இந்த முயற்சியில் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற பங்களிப்பை நல்க வேண்டும்.



கோவை தொழிலதிபர்களின்

## பொறியாளர் தின வாழ்த்து!



இயகோகா சுப்பிரமணியம்



நந்தகுமார், உரிமையாளர், செல்வம் ஏஜென்சி



டி.எஸ்.பி. கண்ணப்பன், நிர்வாக இயக்குநர், கிஸ்கால் டி.எம்.டி.



அருண் கார்த்தி நிர்வாக இயக்குநர் பி.இ.எ

✍ தி கோவை மெயில்

இந்தியாவில் ஆண்டுதோறும் செப்டம்பர் 15ம் நாள் பொறியாளர் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் புகழ்பெற்ற பொறியாளர் விஸ்வேஸ்வரய்யாவை கவுரவிக்கும் வகையில் இந்திய அரசாங்கம் இவரது பிறந்தநாளை பொறியாளர் தினமாக அறிவித்தது.

இத்தினத்தில், இயகோகா சுப்பிரமணியம் பேசுகையில்,"பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் பொறியியல். பாதுகாப்புத்துறை, விண்வெளித்துறை, மருத்துவத்துறை என பல்வேறு துறைகளில் மிகச் சிறந்த பொறியாளர்களை உருவாக்கும் நாடாக இந்தியா திகழ்கிறது. நம் நாட்டின் எதிர்காலம், தற்போது படித்துக் கொண்டிருக்கும் பொறியியல் மாணவர்களிடம் உள்ளது. பொறியாளர்களின் முன்னேற்றத்தை சிறப்பிக்கும் வகையில் பொறியாளர் தினம் அமைந்துள்ளது" என்றார்.

செல்வம் ஏஜென்சி உரிமையாளர் நந்தகுமார் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்., "ராக்கெட் சயின்ஸ் துறையில் உலக அரங்கில் இந்தியா முக்கிய இடத்தை பிடித்திருக்கிறது. அதிலும், சந்திரயான்3 வெற்றிக்குப் பக்கபலமாக பணிபுரிந்தவர்களில் இன்ஜினியர்களே அதிகம். நம் நாட்டின் முதுகெலும்புகளாக பல்வேறு துறை சார்ந்த இன்ஜினியர்கள் உள்ளனர்" என்றார்.

கிஸ்கால் டி.எம்.டி. கம்பிகள் நிர்வாக இயக்குநர் டி.எஸ்.பி. கண்ணப்பன் கூறுகையில்., "வளர்ந்து வரும் இன்றைய சமூகத்தில் இன்ஜினியர்களின் பங்களிப்பு மிகவும் அவசியம். இன்ஜினியரிங் துறை சார்ந்த பணியில் இருப்பவர்களுக்கும், துறை சார்ந்த பட்டப்படிப்புகள் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறைகளில் தங்கள் பணிகளைத் திறம்பட செய்து வாழ்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்" எனத் தெரிவித்தார்.

மேலும்,பாரத் எலக்ட்ரானிக்ஸ் அண்ட் அப்லையன்சஸ் நிர்வாக இயக்குநர் அருண் கார்த்தி கூறுகையில்., "இந்நிறுவனம் தொடங்கி 23 ஆண்டுகளில், இங்கு பகுதி நேர வேளையில் பணிபுரிந்த பல இளைஞர்கள் இன்று இன்ஜினியர்களாக தங்கள் துறைகளில் சாதித்து வருகின்றனர். புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதும், சாத்தியமற்றதை செய்துகாட்டும் சாமானியர்களாக இன்ஜினியர்கள் திகழ்கின்றனர். ஒரு மனிதனின் வாழ்வில் தோல்விகள் இல்லாமல் வெற்றிகள் இல்லை" என்ற அவர்., அயராத உழைப்புடன் புதிய முயற்சிகளில் வெற்றியைக் காண்கின்ற அனைத்து இன்ஜினியர்களுக்கும், இன்ஜினியர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## கே.பி.ஆர் மில்லில் இசை பயிற்சி வகுப்பு

✍ தி கோவை மெயில்

அவிநாசி, தெக்கலூரில் கே.பி.ஆர் மில் குவாண்டம் நிட்ஸ் 3யில் "திசைகள் கடந்த இசை" என்ற நிகழ்ச்சி சமீபத்தில் நடைபெற்றது.

கே.பி.ஆர். நிறுவனம் மற்றும் சம்ஸ்கர் பாரத் இணைந்து, கே.பி.ஆர் மில்லில் பணிபுரியும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பெண்களுக்கு இசை பயிற்சி வகுப்பு நடத்தியது. இந்த இசை பயிற்சியினை சங்கமித்ரா நுண்கலை மையத்தின் இயக்குநரும், சம்ஸ்கர் பாரத்தின் சங்கீதவிதா மாநில பொறுப்பாளருமான மகேஷ்வரி சுப்ரமணி கலந்துகொண்டு பயிற்றுவித்தார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக கே.பி.ஆர். குழுமத்தின் தலைவர் கே.பி.ராமசாமி, உடுமலை ஆர்.கே.ஆர். கல்விக் குழுமத்தின் தலைவர் ஆர்.கே.ராமசாமி மற்றும் மரபின் மைந்தன் முத்தையா ஆகியோர் கலந்துகொண்டனர்.





## இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் வரவேற்பு விழா



முதலாம் ஆண்டு வரவேற்பு விழாவை அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், நிர்வாக செயலாளர் பிரியா சதிஷ்பிரபு மற்றும் கல்லூரி முதல்வர் ஜெயா ஆகியோர் குத்து விளக்கேற்றி தொடக்கி வைத்தனர்.

✍ தி கோவை மெயில்

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி மற்றும் வகுப்புகள் தொடக்க விழா திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்துஸ்தான் கல்வி குழுமங்களின் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் மற்றும் நிர்வாக செயலாளர் பிரியா சதிஷ்பிரபு ஆகியோர் குத்து விளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தனர். விழாவில் அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் பேசுகையில், "ஆற்றல் மிக்க மாணவர்களை வழிநடத்தி, தொழில்நுட்பத்தில் சிறந்த இந்தியாவை உருவாக்குவதில் இந்துஸ்தான் கல்லூரி பெரும் பங்காற்ற வேண்டும்" என வாழ்த்தினார். மேலும் "கல்லூரி நாட்களை பயனுள்ளதாகவும் , பெற்றோரின் கனவுகளை நனவாக்க மாணவர்கள் உறுதி எடுக்க வேண்டும்" என அறிவுறுத்தினார்.

இதையடுத்து, துறை தலைவர்கள் தங்களது துறை சார்ந்த சிறப்பம்சங்களான., பயிலரங்கம், உபகரணங்கள், கற்பித்தல் முறை, பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் திறமை, புத்தகம் வெளியீடு, காப்புரிமை மற்றும் மேற்படிப்பு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள வேலைவாய்ப்புகள், மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு பயிற்சிகள் ஆகியவற்றை எடுத்துக்கூறி தங்கள் துறை மாணவர்களை வரவேற்றனர்.

இவ்விழாவில், இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியின் நிர்வாக செயலாளர் பிரியா சதிஷ்பிரபு, முதன்மை நிர்வாக அதிகாரி கருணாகரன், கல்லூரி முதல்வர்கள் ஜெயா, நடராஜன், இரு கல்லூரிகளின் டீன்கள், இயக்குநர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விநாயகருக்கு தீபாராதனை காட்டும் ரோபோ!



கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் விநாயகர் சதுர்த்தி வெள்ளிக்கிழமை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ரங்கோலி கோலங்கள், உறியடி, கயிரிலுத்தல் போட்டியென மாணவர்கள் உற்சாகமாக விழாவைக் கொண்டாடினர். அதோடு பொறியாளர் தினக் கொண்டாட்டமும் நடைபெற்றது.மாணவர்களால் வரையப்பட்ட 100 க்கும் மேற்பட்ட விநாயகர் ஓவியங்கள் அனைவரின் கவனத்தை ஈர்த்தது. சுற்றுப்புறத்திற்கு கேடு விளைவிக்காத வகையில் களிமண், மைதாமாவு, மரக்கட்டை போன்றவற்றினால் விநாயகர் சிலைகள் செய்யப்பட்டிருந்தன. மெக்கட்ரானிக்ஸ் துறை மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'ரோபோ', விநாயகருக்கு தீபாராதனை காட்டியது விழாவிற்கு சிறப்பு சேர்க்கும்படி அமைந்தது.

துப்புரவு பணியாளர்களுக்கு

## பி.எஸ்.ஜி.,யில் இலவச உடல் பரிசோதனை

✍ தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி. மருத்துவமனையில் கோவை மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு இலவசமாக முழு உடல் பரிசோதனை செய்யும் திட்டத்தின் துவக்க நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

